**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.304/2020**

**வா.சா. – 1– தினேஷ் ஸ்ரீ ராம்**

**நாள். 17.07.2023**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் B.E மெக்கானிக்கல் மற்றும் MBA படித்துள்ளேன். நான் 2013 ம் வருடம் கல்லூரி படிப்பை முடித்தேன். 2016 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நான் பேப்ரிக்கேசன் தொழில் செய்து வந்தேன். பிரதிவாதி கவிதா எனக்கு வீட்டுப்பக்கத்தில் உள்ள புரோக்கர் மூலமாக அறிமுகமானார். முதன்முதலில் பிரதிவாதி கவிதாவை 2016 ம் வருடம் ஜனவரி மாதம் சந்தித்தேன். தேதி ஞாபகமில்லை. கடைசியாக பிரதிவாதி கவிதாவை 2019 ம் வருடம் டிசம்பர் வரை அவர் வீட்டிற்கு சென்று வந்தேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. பிரதிவாதி கவிதா என்னை யாரென்று தெரியாது என்றும், என்னிடம் அவர் தொகை ஏதும் வாங்கவில்லை என்றும் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த எதிர் வழக்குரைக்கு பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். வருமான வரி கணக்கு 2017 லிருந்து தாக்கல் செய்து வருகிறேன். வருமான வரி செலுத்தி வருவதை காண்பிக்க Pan Card நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.17 17:33:33 +0530

Additional District Judge,

Dindigul.